**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.DVC.9/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ராதா | Prosecution | DW-1 Chief |
| Father Name | தில்லை | Defence | |
| Village | கோழிப்பள்ளம் | Taluk | சிதம்பரம் |
| Calling | | Age | 68/2025 |

**Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day 09.07.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் எதிர் மனுதாரர்கள் வசிக்கும் ஊரில் வசிக்கிறேன். எனக்கு அவர்களின் குடும்பம் பற்றி நன்றாக தெரியும். எனக்கு இந்த வழக்கின் மனுதாரரையும் நன்றாக தெரியும். மனுதாரரின் கணவர் இறந்த பிறகு, ஒரு முறை மனுதாரரின் கணவர் என்னிடம் வந்து தனக்கு எதிர் மனுதாரர்கள் வீட்டை எழுதித் தர வேண்டும் என்றும் அது சம்பந்தமாக தங்களுக்கு இடையே பிரச்சனை நிலவி வருகிறது என்றும் கூறினார். அதற்கு நான் அவரிடம் குடும்பம் என்றால் அப்படித்தான் இருக்கும் என்று சொல்லி அனுசரித்து நடக்கச் சொன்னேன். பிறகு அவர் என்னிடம் தான் தனிக்குடித்தனம் செல்ல இருப்பதாக தெரிவித்தார். அதற்குப் பிறகு அவர் தனிக்குடித்தனம் சென்று விட்டார். பிறகு ஒரு முறை என்னை சந்தித்தபோது தனக்கு வேலை வாங்குவது சம்பந்தமாக லட்சக்கணக்கில் பணம் தேவைப்படுகிறது என்றும் அதற்கு வீட்டை அடமானம் வைக்க வேண்டும் என்றும் அதற்கு தனது தந்தை சம்மதம் தெரிவிக்கவில்லை என்றும் கூறினார். அதன் பிறகும் அவர் பலமுறை என்னை சந்தித்தபோது தனக்கு ஒரே டார்ச்சர் ஆக இருக்கிறது என்று கூறியுள்ளார். இந்த சூழ்நிலையில் தன்னால் குடும்பம் நடத்த முடியவில்லை என்று தெரிவித்தார். ஆதி ஒவ்வொரு முறையும் என்னிடம் அவருடைய மனைவி தான் அவரை டார்ச்சர் செய்வதாக கூறினார். நான் குடும்பம் என்றால் அப்படித்தான் இருக்கும் என்று சொல்லி அனுசரித்து போக சொல்லி ஆலோசனை கூறினேன். தன்னுடைய மனைவி வேலை வாங்குவதற்கு பணம் கேட்டு எப்போதும் டார்ச்சர் செய்வதாக கூறியுள்ளார்.

ஆதி ஏற்கனவே அவருடைய கல்யாணத்திற்காக ரூ.5,00,000/— கடன் வாங்கியிருந்தார். அந்த பைனான்சை சேர்ந்த நபர்கள் அந்த கடன் திரும்ப செலுத்தப்படாததால் ஆதியின் அம்மாவினுடைய ATM கார்டை வாங்கி வைத்துக் கொண்டுள்ளார்கள். பிறகு ஆதி இறந்துவிட்டார். நான் ஆதியின் மனைவியின் டார்ச்சர் காரணமாகத்தான் ஆதி இறந்துவிட்டார் என்று எதிர் மனுதாரர்களிடம் கூறி அவர்களை அது குறித்து ஒரு வழக்கை பதிவு செய்ய சொன்னேன். ஆனால் அவர்கள் குடும்பத்திற்குள் பிரச்சனை வேண்டாம் என்று சொல்லி தவிர்த்து விட்டார்கள். நடந்தது இதுதான்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.DVC.9/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | கலைச்செல்வன் | Prosecution | DW-2 Chief |
| Father Name | பாலமுத்து | Defence | |
| Village | கோழிப்பள்ளம் | Taluk | சிதம்பரம் |
| Calling | | Age | 45/2025 |

**Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**
**09.07.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல்விசாரணை**

1. நான் எதிர்மனுதாரர்கள் வசிக்கும் அதே ஊரில் வசிக்கிறேன். எனக்கு அவர்களது குடும்பம் பற்றி நன்றாக தெரியும். எனக்கு மனுதாரரையும் தெரியும். மனுதாரரின் ஆதி தனது திருமணத்திற்காக ரூ.5,00,000/- கடன் வாங்கியுள்ளார். அது பற்றி என்னிடம் ஆதியே நேரடியாக சொல்லியுள்ளார். பின்னிட்டு அவர் வேலைவாய்ப்பு சம்பந்தமாக தனது வீட்டை அடமானம் வைத்து ரூ.10,00,000/- கடன் வாங்கினார். சத்தியமூர்த்தி என்பவரிடம் அவர் கடன் வாங்கி இருந்தார். அந்த பணத்தை திரும்ப செலுத்தாத காரணத்தால் ஆதியின் அம்மாவுடைய ATM Cardஐ அவர்கள் பிடுங்கி வைத்துக் கொண்டார்கள். அதன் பிறகு ஆதி இறந்துவிட்டார். மனுதாரர் இந்த வழக்கை கொடுத்து அதனால் பிரச்சனை ஓடிக்கொண்டிருக்கிறது.

2. எங்கள் ஊரில் உள்ள எதிர்மனுதாரர்கள் வீட்டில் ராமானுஜம், அவர் மனைவி பாமா ராணி ஆகிய இருவரும் குடியிருக்கிறார்கள். ராமானுஜத்திற்கு இன்னொரு மனைவி மற்றும் குடும்பம் இருக்கிறது. அந்த முதல் மனைவி சென்னையில் வசிக்கிறார். அவர்களுடைய மகன் இமயவரம்பன் எங்கள் ஊரிலேயே ஆட்டோ ஓட்டுகிறார். நடந்தது இவ்வளவுதான்.